

ஆந்திர மாநிலம் புட்டபர்த்தியில் உள்ள பிரசாந்தி நிலையத்தில் நேற்று (23.11.2025) நடைபெற்ற சத்ய சாய்பாபா அவர்களின் நூற்றாண்டு விழாவில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்துகொண்டு, எண்ணற்ற ஏழை மக்களுக்கு சத்ய சாய்பாபா அவர்கள் ஆற்றிய மருத்துவச் சேவைகளையும், கிருஷ்ணா நதிநீரைப் பங்கிட்டுக்கொள்வதில் தமிழ்நாடு மற்றும் ஆந்திர மாநிலத்திற்கிடையே அவர் பாலமாகச் செயல்பட்டதையும் நினைவுகூர்ந்து, சத்ய சாய்பாபா பெயரிலான மக்கள் நலப்பணிகள் தொடர வேண்டும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதிய வாழ்த்துக் கடிதத்தை, சத்ய சாய் அறக்கட்டளையின் நிருவாக அறங்காவலர் ஆர்.ஜெ. ரத்னகர் அவர்களிடம் வழங்கினார்.

### விமான விபத்தில் உயிரிழந்த

# ‘விங் கமாண்டர்’ நமன்ஷ் சியாலுக்கு வீரவணக்கம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

சென்னை, நவ.24-

துபாய் ஏர் ஷோ நிகழ்ச்சியில் தேஜஸ் விமான விபத்தில் உயிரிழந்த ‘விங் கமாண்டர்’ நமன்ஷ் சியால் அவர்களின் உடல் கோவை சூலூர் விமானப்படை தளத்திற்கு கொண்டு வரப்பட்டதையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்

சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு :-

**‘விங் கமாண்டர்’ நமன்ஷ் சியால் அவர்களுக்கு வீரவணக்கம்!**



**அவரது உடல் கோவைக்குக் கொண்டுவரப்பட்ட காட்சிகளைக் கண்டு கலங்கினேன். கோவை சூலூர் விமானப்படை தளத்தில் பணிபுரிந்த அவருக்குத் தமிழ்நாடு தனது அஞ்சலியைச் செலுத்துகிறது. அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**His courage remains immortal.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### தமிழ் தொண்டினை கௌரவிக்கும் விதமாக

# கவிஞர் ஈரோடு தமிழன்பனுக்கு காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**ஈரோடு, நவ. 24-**

**கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்களுக்கு காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.**

கவிஞர் ஈரோடு தமிழன்பன் என்கிற திரு. ந. செகதீசன் அவர்கள் உடல்நலக்குறைவின் காரணமாக இயற்கை எய்தியதையடுத்து அன்னாரின் உடலுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் நேற்று முன்தினம் (22.11.2025) நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

மேலும், இறுதிக்காலம் வரையிலும் பல வகைமைகளிலும் தமிழுக்குத் தொண்டாற்றிய, நீண்ட நெடிய பெருவாழ்வுக்குச் சொந்தக்காரரான கவிஞர் ஈரோடு தமிழன்பனை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கும், தமிழன்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் முதலமைச்சர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்களின் தமிழ் தொண்டினை கௌரவிக்கும் விதமாக காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

இதைத் தொடர்ந்து, காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டு அன்னாரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 277 வது நாள்!

## அம்பத்தூர் வடக்கு பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை, நவ.24-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 277 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (23.11.2025), அம்பத்தூர் வடக்கு பகுதி: 1) வட்டம் 79, காந்திநகர் பொது சுகாதார நிலையம், காந்தி நெடுஞ்சாலை, ஒரகடம். 2) வட்டம் 79அ, வெங்கடேஸ்வரா நகர், ஏரிக்கரை சாலை,



மாசிலாமணிஸ்வரர் தெரு, சந்திப்பு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, எஸ்.பி. ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், பி.கே. மூர்த்தி.எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல். பி.எஃப்.மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி, து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி. அம்பத்தூர் வடக்கு/தெற்கு /கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த. கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ. சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர்.டீக்கா, மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால், பி.செந்தில். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### ஒன்றிய செயலாளர் பி.எம்.குமார் தலைமை!

# காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியத்தில் எளியோர் எழுச்சி நாள் தெருமுனைக் கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ - தூத்துக்குடி சரத்பாலா சிறப்புரை!

காஞ்சிபரம். நவ.24,

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றியங்களில் 25.11.2025 அன்று 48 இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவது என மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியத்தில் ஒன்றியச் செயலாளர் பி.எம்.குமார் தலைமையில் மூன்று இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெறுகின்றன.

அதன்படி நாளை (25.11.2025செவ்வாய்க் கிழமை) மாலை 4 மணிக்கு, நரப்பாக்கம் ஊராட்சியில் மாலை 4 மணிக்கும், பெரும்பாக்கம் ஊராட்சியில் மாலை 5 மணிக்கும், மாலை 6 மணிக்கு கிளார் ஊராட்சியிலும் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெறுகின்றன.

அனைத்து தெருமுனைக் கூட்டங்களுக்கும் ஒன்றியச் செயலாளர் பி.எம்.குமார் தலைமை வகிக்கிறார்.

எஸ்.பாரத், எம்.பழனி, ரா.நிதிஷ்குமார் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

பா.தேவபாலன், என்.அருண்குமார், எ.சுந்தரம், என்.சம்பத், எ.கருணாநிதி, பி.மகேந்திரன், வி.சதீஷ், எம்.மகேந்திரன், வி.அருள், எஸ்.மாலினி, கோட்டீஸ்வரி ஆறுமுகம், கே.வி.குமார், ஜெ.சங்கர், எம்.சுப்பிரமணி, கே.ஏழுமலை, சசிகலா கிருஷ்ணன், அ.வளையாபதி, கே.பாண்டியன், டி.வில்வம், எ.பிரகாசம், கே.தமிழழகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அனைத்து தெருமுனைக் கூட்டங்களிலும் மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., தலைமைக் கழகப் பேச்சாளர் தூத்துக்குடி சரத்பாலா ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் இக் கூட்டங்களில் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., சி.வி.எம்.பி எழிலரசன் எம்.எல்.ஏ, ஜெ.இராமகிருஷ்ண ன், கோவை. துரைமுருகன், மலர்கொடிகுமார், எம்.எஸ். சுகுமார், நித்யா சுகுமார், எஸ்.மாரிமுத்து, இரா.இளஞ்செழியன், எஸ்.வி.ரமேஷ், மகாலட்சுமி ராஜசேகர், அ.வேலுசாமி, எஸ்.எஸ்.ஆர்.சசிகுமார், பி.என்.ரவி, நா.கருணாகரன், சி. ராதாகிருஷ்ணன், ஆ.சசிகுமார், தி.இராம் பிரசாத், எஸ்.தமிழ்ச்செல்வன், பி.எம்.நீலகண்டன், எம்.துரைசாமி, எம்.மகாவீர்சந்த், டி. ராஜா, ஆர்.வரதன், எம்.மகேந்திரன், சி. எஸ்.விஜி, எஸ்.நவீன், ஆ.தினேஷ் பாபு, ஆர். விஜய லட்சுமி மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் கே.கார்த்தி கேயன் நன்றி கூறுகிறார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வே. குமரேசன்

**நவம்பர் 24 (2006)**



**இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து, ஆர்.கே.நகர் பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர்.**

**17வது வட்டக் கழகச் செயலாளராகவும் – பகுதி துணைச் செயலாளராகவும் – பகுதி செயலாளராகவும், பின்னர் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.**

**வண்ணாரப்பேட்டை பால் நுகர்கோவர் கூட்டுறவு சங்கத் தலைவராகவும், நாம்கோ இயக்குநராகவும் பதவி வகித்தவர்.**

**1962 – விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் – இலங்கைத் தமிழர் ஆதரவுப் போராட்டம் போன்ற கழகம் அறிவித்த அனைத்துப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### புதுச்சேரி முத்தியால்பேட்டை தொகுதி மக்களை

# ரவுடிகள், கந்துவட்டி கும்பலிடம் இருந்து காப்பாற்றிடுக!

## நந்தா சரவணன் - சவுரிராஜன் தலைமையில் துணைநிலை ஆளுநரிடம் மனு !

புதுச்சேரி, நவ. 24-

புதுச்சேரி முத்தியால்பேட்டை தொகுதியில் அதிகரித்து வரும் கந்து வட்டி கும்பல் அராஜகம், ரவுடிகள் அட்டூழியம், போதை கும்பலின் அடாவடிகளை இரும்புக்கரம் கொண்டு கட்டுப்படுத்தி வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் அச்சமின்றி வாழ்வதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று தி.மு.க. சார்பில் துணைநிலை ஆளுநரிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

புதுச்சேரி மாநிலம் முத்தியால்பேட்டை தொகுதி திமுக சார்பில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நந்தா. சரவணன், தொகுதி செயலாளர் சவுரிராஜன் ஆகியோர் தலைமையில் திமுக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் நேற்று முன்தினம் மாலை புதுச்சேரி ராஜ்நிவாசில் துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதனை சந்தித்து கோரிக்கை மனு ஒன்று அளித்தனர்.

மனுவில் கூறியிருப்பதாவது: -

புதுச்சேரி முத்தி யால்பேட்டை தொகுதியில் ரவுடிகள் மாமூல் கேட்டு வணிகர்களை மிரட்டுதல், கொடுக்கவில்லை என்றால் கடையை சூறையாடுதல், கத்தியை காட்டி மிரட்டுவது போன்ற சம்பவங்கள் அடிக்கடி நடக்கிறது. பூ, பழம், மீன் விற்கும் பெண்கள், தட்டு வண்டியில் வியாபாரம் என சிறுவணிகம் செய்பவர்களிடம் கந்து வட்டி கொடுத்து கட்டுவதில் தாமதம் ஏற்பட்டால் அவர்களை மிரட்டுவது தொடர்கதையாகி வருகிறது. இந்த தொழில்களில் உள்ளூர் மற்றும் வெளியூர் நபர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் வணிகர்கள், பொதுமக்கள் நடமாட முடியாத நிலை உள்ளது. கஞ்சா உள்ளிட்ட போதை கும்பலின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் பள்ளி மற்றும் கல்லூரி செல்லும் மாணவர்கள், அவர்களை அழைத்துச் செல்லும் பெற்றோர்கள் அச்சப்படும் நிலை உள்ளது. தமிழ்நாட்டில் கந்துவட்டி தடைச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோல் புதுச்சேரியில் சட்டம் இயற்றிட வேண்டும். புதுச்சேரியில் குறிப்பாக முத்தியால்பேட்டை தொகுதியில் கந்துவட்டி கும்பல், மாமூல் கேட்டு மிரட்டும் ரவுடிகள், கஞ்சா விற்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்து வியாபாரிகள், பொதுமக்கள் அச்சமின்றி வாழ்வதற்கு வழிவகை செய்ய வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின்போது, தொகுதி திமுக அவைத் தலைவர் எழிலன், மாநில பிரதிநிதி தனசேகர், செயற்குழு உறுப்பினர்கள் சண்முகம், வெங்கடேசன், வேணு, மாநில நெசவாளர் அணி அமைப்பாளர் செந்தில் முருகன், துணை அமைப்பாளர் சந்துரு, மாநில மீனவர் அணி துணை அமைப்பாளர் தங்கராசு, முன்னாள் மாநில சிறுபான்மை அணி துணை அமைப்பாளர் அல்போன்ஸ், கிளைக் கழகச் செயலாளர்கள் பிரகாஷ் @ குமரவேல், பாஸ்கர் @ ஆறுமுகம், சண்முகம் ஆகியோர் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவண்ணாமலை தர்மலிங்கம்

**நவம்பர் 24 (1986)**



**மாவட்டச் செயலாளராகவும், திருவண்ணாமலை நகர்மன்றத் தலைவராகவும், அன்றைய வடஆற்காடு மாவட்டத்தின் தூண்களில் ஒருவராகவும் விளங்கினார்.**

**1957ஆம் ஆண்டில் தி.மு.க. முதல்முறையாக பொதுத் தேர்தல்களில் போட்டியிட்டபோது கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது**

**அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரிடம் மிக நெருங்கிப் பழகியவர்.**

**நெருக்கடிநிலை காலத்தில் ஓராண்டு மிசா கைதியாக சிறைவாசம் அனுபவித்தவர்.**

**கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**